கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி பேட்டை தளபதி உதயநிதி ஸ்டாலின் ஆட்டோ தொழிலாளர் முன்னேற்ற சங்கம் மற்றும் நெல்லை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம், பேட்டை எம்.என்.பி.சன்னதி தெரு இராணி அண்ணா மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காதல் ஒலி செயலாளர் அந்தோணி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என். மாலைராஜா தலைமை வகித்தார்.கண் சிகிச்சை முகாமை கழக சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம். மைதீன்கான் துவக்கி வைத்தார். நிகழ்வில் கழக நிர்வாகிகள் துரை சக்திகீதா,விஜிலா சத்தியானந்த், சு.சுப்பிரமணியன்,ராஜு,முருகன், ராஜவர்மன்,கருப்பசாமி கோட்டையப்பன்,மீரான்மைதீன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றியம் பேரூர் கழக பாகமுகர்கள் கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. எஸ்.ஐ.ஆர். குறித்து விளக்கி பேசினார். உடன் முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர் பி.ஆர்.என்.போஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தீராக்காதல் திருக்குறள் திட்டத்தின் கீழ்

“வள்ளுவம் வாழ்க்கையானால்...” நாட்டிய நாடக நிகழ்ச்சி!

அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.29-

தமிழ் வளர்ச்சித் துறை நிதி நல்கையுடன் தீராக் காதல் திருக்குறள் என்ற திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் கீழ் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் இயங்கி வரும் தமிழ் இணையக் கல்விக்கழகம் செயல்படுத்தி வருகிறது.

இதில் முதற்கட்டமாக, திருக்குறளின் சிறப்பை இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்லும் விதமாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குக் குறளோவியப் போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுத்தொகையும் சான்றிதழ்களும் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. அவற்றுள் சிறந்த ஓவியங்கள் நாட்காட்டியாகத் தொகுக்கப்பட்டுப் பொதுமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் தமிழ் மின் நூலகத்தில் (www.tamildigitallibrary.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்வோவியங்கள் சென்னை, மதுரை ஆகிய நகரங்களில் பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டன. அதனைத்தொடர்ந்து, ‘குறள் இனிது’ என்ற நாட்டிய நாடகம் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடத்தப்பட்டது.

இதன் அடுத்தகட்டமாக, திருக்குறளின் பொருண்மைகளை எடுத்துரைக்கும் விதமாக நாட்டிய நாடக நிகழ்ச்சிகளை கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டு, 13.10.2025 அன்று கோயம்புத்தூர் குமரகுரு கல்வி நிறுவனத்தில் திருக்குறள் நாட்டிய நாடக நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதன் தொடர் நிகழ்வாக மதுரை, பாத்திமா கல்லூரியில் நேற்று (27.11.2025) கலைச்சுடர் மணி திருமதி சஸ்மிதா அரோராவின், சங்கரம் நடனக் குழுவினரினைக் கொண்டு “வள்ளுவம் வாழ்க்கையானால்...” என்ற திருக்குறள் நாட்டிய நாடக நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில், மனித வாழ்வுக்குத் தேவையான இன்றியமையாக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட திருக்குறளின் அறக்கருத்துகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் நாட்டிய நாடகம் மூலம் விளக்கினர்.

இந்நிகழ்ச்சியினை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்துத் தலைமையுரையாற்றினார்.

இந்நிகழ்வில் மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் திருமிகு. வானதி, பாத்திமா கல்லூரியின் செயலாளர் முனைவர் சகோதரி இக்னேசியஸ் மேரி. முதல்வர் முனைவர் பாத்திமா மேரி, தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இயக்குநர் (பொ.) ரெ.கோமகன், துணை இயக்குநர் திருமதி அ.அருண்மொழி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நாட்டிய நாடக நிகழ்ச்சியினை 1000க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் கண்டுகளித்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

தமிழ்நாடு முழுவதும் கழக மருத்துவ அணி சார்பில் மருத்துவ முகாம்கள்!

கழக மருத்துவ அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, நவ.29-

தி.மு.க. மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், சென்னையில் உள்ள ஹோட்டல் அக்கார்ட் மெட்ரோபாலிடனில் நடைபெற்றது.

மருத்துவ அணியின் மாநிலத் தலைவர் மரு கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி இக் கூட்டத்திற்கு தலைமையேற்றார். மாநிலச் செயலாளர் மரு எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ அவர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு அவர்கள் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று உரையாற்றினார்.

இணைச் செயலாளர் மரு ஆர்.அண்ணாமலை, துணைச் செயலாளர்கள் மரு ஆர்.இராஜேஸ்வரி மோகன்காந்தி, மரு ஆர்.டி.அரசு, மரு ஜெ.அருண், மரு அஞ்சுகம் பூபதி, மரு கலைக்கதிரவன், மரு ஆர்.திலீப்குமார், மரு செண்பகவிநாயகம், திருமிகு திலகவதி ஜெயராஜ், மரு இராஜேஷ்பாபு, மன்சூர் அலிகான், மரு ஆர்.எஸ்.கிருத்திகா, மரு இரா.விவேக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மருத்துவ அணி சார்பில் இது வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து ஆய்வும், அடுத்தக் கட்ட பணிகள் குறித்த ஆலோசனையும் மேற்கொள்ளப்பட்டன.

மாநில அளவிலான நிர்வாகிகளுக்கான பொறுப்பு மாவட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பின்வரும் எட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை சட்டமன்றத் தொகுதியின் மருத்துவ அணி அமைப்பாளராக பணியாற்றி வந்த மருத்துவர் பி.ராஜராஜன் அவர்கள் சமீபத்தில் மறைந்தார். கழகத்தில் தீவிரமாக பணியாற்றி, தஞ்சை பகுதியில் மருத்துவ அணிக்கு வலு சேர்த்த தோழரின் இறப்புக்கு, மருத்துவ அணி சார்பில் இரங்கல் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அளவில் எந்த மாநிலமும் எட்ட முடியாத வகையில் 11.19 சதவீத பொருளாதார வளர்ச்சி, 10 லட்சம் கோடிக்கும் மேலாக தொழில்துறையில் அந்நிய முதலீடுகள், 14 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் மேலாக குறுவைப் பருவத்தில் நெல் கொள்முதல், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் இரண்டு கோடியை தாண்டிய பயனாளர் எண்ணிக்கை, தமிழ்நாடு முழுவதும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் உள்ளிட்ட பல நூறு திட்டங்களின் வழியாக, மகத்தான சாதனைகளை நிகழ்த்தி வருகிறது திராவிட மாடல் அரசு. தமிழ்நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்து, சமூகப் பாதுகாப்பு கட்டமைப்புகளை வலுப்படுத்தி வரும் திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மருத்துவ அணி நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

இளைஞர் அணி நடத்திய அறிவுத் திருவிழா!

திராவிட இயக்கத்தின் இலட்சியங்களை, வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் வகையில், திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டம், முரசொலி பாசறை, முத்தமிழறிஞர் பதிப்பகம், தொகுதி தோறும் கலைஞர் நூற்றாண்டு நூலகம், வீதி எங்கும் உரையாற்ற 200 இளம் பேச்சாளர்கள், தமிழ்நாடு முழுவதும் இளைஞர்களுக்கு சமூக வலைதள பயிற்சி, இயக்கத்தின் வரலாற்றை ஆவணப்படுத்தும் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல், 75 ஆண்டு கால கழகத்தின் அறிவு வலிமையை பறைசாற்றும் அறிவுத் திருவிழா என இயக்கத்தின் இளைஞர்களை, இலட்சிய வழிப்படுத்தும் கழகத்தின் இளம் தலைவர் இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மருத்துவ அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், கழக அரசின் சாதனைகளை மக்களிடம் பரப்பும் நிகழ்வுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் படி, தமிழ்நாடு முழுவதும் மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், விழிப்புணர்வு பேரணிகள், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு அரசு சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், மண்டல அளவில் நான்கு ஆங்கில கருத்தரங்கங்கள், மண்டல அளவில் ஆறு பகுத்தறிவு மற்றும் சமூக நீதி கருத்தரங்கங்கள், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளான சமத்துவ நாளை முன்னிட்டு சென்னையில் பிரம்மாண்ட கருத்தரங்கம், மாவட்டம் மற்றும் தொகுதி அளவில் நிர்வாகிகள் நியமனம் என மருத்துவ அணியின் தொடர்ச்சியான பணிகளில் பங்களிப்பு செலுத்தி வரும், மாநில நிர்வாகிகள், மாவட்டம் மற்றும் தொகுதி நிர்வாகிகள் அனைவருக்கும் இக்கூட்டம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. தலைவரின் கட்டளைப்படி சீரிய வகையில் தொடர்ச்சியாக செயல்பட இக்கூட்டத்தில் உறுதி ஏற்கப்படுகிறது.

வாக்காளர் பட்டியலில் குழப்பங்கள்!

தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்கிற பெயரில், தமிழ்நாட்டில் உள்ள வாக்காளர் பட்டியலில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கிறது. வாக்காளர்களையும், இப்பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களையும் அலைக்கழிக்கும் வகையில், அவசரகதியில் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. தேர்தல் ஆணையத்தை பயன்படுத்தி தமிழ்நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கும் பாஜகவின் சதிச் செயலுக்கு எதிராக, கழகத் தலைவர் வகுத்துள்ள திட்டங்களின் படி, மருத்துவ அணி சார்பில் நாம் ஒவ்வொருவரும் முழுமையான அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டும்.

மேலும் நமது வாக்குகள், நமது குடும்பத்தினர் வாக்குகள், நமது சுற்றத்தினர் வாக்குகள், மருத்துவமனைகள், ஆய்வகங்கள், மருந்தகங்கள், சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட நாம் தொடர்புடைய இடங்களில் உள்ள அனைவரின் வாக்குகளையும் உறுதி செய்ய தீவிரமான களப் பணி ஆற்றுவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

கல்வி நிதி மறுப்பு, மொழித் திணிப்பு, மதுரை கோவை உள்ளிட்ட மாநகரங்களுக்கான மெட்ரோ திட்டங்கள் நிராகரிப்பு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்த மறுப்பு என பல வகைகளிலும் தமிழ் நாட்டைத் தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் பாஜகவிற்கும், அதற்கு துணை போகும் அதிமுகவிற்கும் மருத்துவ அணி சார்பில் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய மருத்துவ ஆணையம், சுகாதாரத் துறையில் மாநிலங்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் அதிகார குவிப்பிற்கு இது வழி வகுக்கிறது. குறைந்தபட்சம் மாநிலங்களின் சரியான பிரதிநிதிகள் அடங்கிய ஆணையமாக தேசிய மருத்துவ ஆணையம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என திமுக மருத்துவ அணி வலியுறுத்துகிறது.

பாஜகவின் அடக்குமுறைகளுக்கு எதிராக தொடர்ச்சியாக போராடிக் கொண்டே, தமிழ் நாட்டை அனைத்து துறைகளிலும் முதன்மை மாநிலமாக வளர்த்து வரும் ‘திராவிட மாடல்’ அரசு மீண்டும் அமைய, கழகம் ஏழாவது முறையாக அரியணை ஏற, நம் தலைவர் இரண்டாவது முறையாக முதலமைச்சராவதற்கான அனைத்து பகுதிகளையும் மேற்கொள்ளவும், முழு ஈடுபாட்டுடன் விரிவான பரப்புரை திட்டங்களை வகுத்து 2026 தேர்தலுக்காக பணியாற்றவும், மருத்துவ அணி நிர்வாகிகளை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் கழக மாவட்டங்களைச் சேர்ந்த மருத்துவ அணி மாவட்டத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

கடலூர் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் இளைஞர் எழுச்சி நாள் விழா

மருத்துவ உபகரணங்கள்,தங்க மோதிரம், உணவு, 50ஆயிரம் மரக்கன்றுகள் - நல உதவிகள்!

மாவட்டப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தலைமையில் வழங்கல்!

கடலூர், நவ. 29 -

துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாள் இளைஞர் எழுச்சி நாளாக கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும், கழக கொடியேற்றி,10ஆயிரம் பேருக்கு அன்னதானம்,கல்வி உபகரணங்கள், மருத்துவ பணியாளர்களுக்கு மருத்துவ உபகரணங்கள், பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் 50 ஆயிரம் மரக்கன்றுகள் வழங்கியும், அன்று அரசு மருத்துவமனையில் பிறந்த 21 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் உள்ளிட்ட நலத் திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, குறிஞ்சிப்பாடி ஒன்றிய கழகம் சார்பில் வடலூர் வள்ளலார் தெய்வநிலைய பெருவெளியில் துவங்கிய மாரத்தான் ஓட்டம், குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் அருகே முடிவுற்றது. இந்த மாரத்தான் போட்டியை மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் கொடியசைத்து துவக்கி வைத்து, போட்டியில் வெற்றிப்பெற்ற மற்றும் பங்கேற்றவர்களுக்கு கோப்பைகள்,பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி கடலூர் மேற்கு ஒன்றியத்துக்குட்பட்ட வானமாதேவி ஊராட்சியில் உள்ள அரசு நடுநிலை பள்ளியில் பயிலும் 100க்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்களுக்கு ஸ்கூல் பேக், பொதுமக்கள் மற்றும் மாணவ செல்வங்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி பரங்கிப்பேட்டை மேற்கு ஒன்றியத்துக்குட்பட்ட மேலமூங்கிலடி ஊராட்சியில் 300க்கும் மேற்பட்ட மகளிருக்கு புடவை, மரக்கன்றுகள் மற்றும் இனிப்புகளை எம்.ஆர்.கே.பி.கதிரவன் வழங்கினார்.

சிதம்பரம் இராஜா முத்தையா மருத்துவமனை மற்றும் கடலூர் தலைமை அரசு மருத்துவமனையில் 27112025 அன்று பிறந்த 21 குழந்தைகளுக்கு மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தங்க மோதிரத்தை அணிவித்து, தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகத்தினை வழங்கினார். பின்னர் மக்களைத் தேடி மருத்தும் என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் பணியாற்றும் 100க்கும் மேற்பட்ட செவிலியர்களுக்கு இரத்த அழுத்தத்தை கண்டறியும் கருவியினை வழங்கினார்.

அண்ணாமலை நகர் பேரூர் பகுதியில் கிரிக்கெட் மற்றும் வாலிபால் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங கள் வழங்கப்பட்டது.பின்னர் ஆட்டோ ஓட்டுநர்கள் 100 க்கும் மேற்பட்டவர்களுக்கு புதிய சீருடை வழங்கப்பட்டது.

சிதம்பரம் சட்டமன்ற தொகுதி, குமராட்சி கிழக்கு ஒன்றியம், நான்முனிசிபல பகுதியில் தூய்மை பணியாளர்களுக்கு புதிய சீருடை வழங்கப்பட்டது. மகளிர் குழுவினர்களுக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

புவனகிரி சட்டமன்ற தொகுதி, கீரப்பாளையம் கிழக்கு ஒன்றிய கழகம் சார்பில், கீரப்பாளையம் ரவுண்டானா அருகில், தூய்மை பணியாளர்களுக்கு புதிய சீருடை மற்றும் பொதுமக்களுக்கு மரக்கன்றுகள், இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

சேத்தியாதோப்பு பேரூர் கழகம் சார்பில், ராஜீவ்காந்தி சிலை அருகே தூய்மை பணியாளர்களுக்கு புதிய சீருடை மற்றும் பெண்களுக்கு புடவை, பொதுமக்களுக்கு மரக்கன்றுகள், அன்னதானம் வழங்கப்பட்டது. பின்னர் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உப கரணங்கள் வழங்கப்பட்டது.

கீரப்பாளையம் மேற்கு ஒன்றிய கழகம் சார்பில், வாழக்கொல்லை ஊராட்சியில், விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங கள் வழங்கப்பட்டது. பின்னர் வாழக்கொல்லை ஊராட்சி நடுநிலைப் பள்ளியில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது. பின்னர் தூய்மை பணியாளர்களுக்கு மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டது.

கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம், 500க்கும் மேற்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரம், 50 ஆயிரத்தற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு புதிய சீருடைகள், ஆயிரத்திற்கும் பெண்களுக்கு புடவைகள், 500க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு கிரிக்கெட், டென்னீஸ் மற்றும் வாலிபால் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்கள், 200க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்களுக்கு புதிய சீருடைகள், 100க்கும் மேற்பட்ட செவிலியர்களுக்கு மருத்துவ உபகரணங்கள், 27112025 அன்று பிறந்த 21 குழந்தைகளுக்கு தங்க மோதிரம், தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகம், பழங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை கடலூர் கிழக்கு மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தலைமையில் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி, ,பி.சுப்பிர மணியன், டாக்டர்.மனோகரன், த.சங்கர், வி.ஜி.பி. சபாநாயகம்,டி.ஆர்.திருமூர்த்தி, ஏ.எம்.மதியழகன், நகர கழக செயலாளர் த. தமிழ்செல்வன், நகரமன்ற தலைவர் சு.சிவக்குமார், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், துணை தலைவர் சுப்புராயலு, அண்ணாமலை நகர் பேரூராட்சி தலைவர் க.பழனி, ப.மனோகரன், பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், துணை தலைவர் ஆர்.ராமர், பரங்கிப்பேட்டை ஒன்றிய குழு தலைவர் கருணாநிதி, உள்ளிட்டவர்கள் கலந்துக் கொண்டனர்.

நெல்லை மேற்கு மாநகரில் பாக முகவர்கள் (BLA2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆகியோருக்கு அதன்படி நெல்லை கிழக்கு பகுதி 23 வது வார்டு 219,227,228, 231, 232,235,236, 237,247 ஆகிய வாக்குச்சாவடிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) ஆலோசனைக் கூட்டம் பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் தலைமையில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஜெய்கணேஷ்,நியாஸ், கண்ணன்,செல்வம்,விஸ்வதாஸ், வேலாயுதம்,முகமது இஸ்மாயில், அருணா தேவி,முகேஷ்,சிவசங்கரி, சுப்புலட்சுமி,ஷெட்டி,மகாராஜன், ராமன், அந்தோணி ராஜ்,கார்த்திக், முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்!

இளைஞர்களின் இனிய கனவே...
ஏழைகளின் அட்சய பாத்திரமே....
நாளைய இந்தியாவின் நடு நாயகமே..

இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்!
சின்னவரே... சிறு சந்தேகம்! வாழ்த்தும்
போதும்... எதிரியை வீழ்த்தும் போதும்...
சிரித்துக் கொண்டே செய்யும் கலையை எங்கே கற்
“அது கல்... பேசாது”... கலைஞர் பராசக்தியில் எழுதியது...
“இது செங்கல்...”
ஒன்றிய அரசின் புளுகு மூட்டையைப் பிரிச்சு மேயும்.
உதயநிதி மதுரையில் பேசியது.

தமிழர் வீரத்தை பழித்த கனக விசயரை களத்திலே
பந்தாடி... அவர்களை இமயத்திலிருந்து கல் சுமந்துவர வைத்து..
அந்தக் கல் கொண்டு கண்ணகிக்கு கோட்டம் அமைத்தவன் சேரன் செங்குட்டுவன்!
அதனை ஓரங்க நாடகமாக வடித்தவர் கலைஞர்.



தற்போது தமிழ் மாநிலத்துக்கு எல்லா விதத்திலும் துரோகம் செய்யும் ஒன்றிய அரசை ஜனநாயக ரீதியாக ஓடவிட்டு நம் உரிமைகளை மீட்டெடுக்கப் போகிறவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் அரசு தளபதி உதயநிதி ஸ்டாலின்.

இவர் காலத்தில் கழகங்கள் ஒன்றாகும். மாநில சுயாட்சி மலரும். மத்தியில் கூட்டாட்சி உருவாகும். ஒரு தமிழன் பாரதப் பிரதமராகும் காட்சி நிறைவேறும்.

இயக்குநர் வி.செ.குகநாதன்